அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 02/2021

எனது இலக்கம் : EST-6/04/INS/1010
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.10.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**கொவிட் – 19 நோய்த் தொற்றுக்குள்ளான அரச உத்தியோகத்தர்களுக்காக அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குதல்**

கொவிட் - 19 நோய்த் தொற்றுக்குள்ளான அரச உத்தியோகத்தர்களுக்கு அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் உரித்தாகும் நன்மைகள் தொடர்பான விசாரணைகள் நிறுவனத் தலைவர்களிடமிருந்தும் அரச உத்தியோகத்திர்களிடமிருந்தும் இந்த அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடம் வினவப்பட்டதற்கு ஏற்ப, சிகிச்சை பெறும் விதத்தை கவனத்திற் கொண்டு கொவிட் - 19 நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வரும் அரச உத்தியோகத்தர்களுக்கு, அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, வழங்கப்படும் நன்மைகள், நன்மைகள் வழங்கப்படும் முறைமை, அதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் உள்ளிட்ட ஏனைய ஏற்பாடுகள் பற்றிய தகவல்களை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு (www.nitf.lk) பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு